 ISSN: 2454-3993

# சமகால வரலாறும் புனைவாக்க அரசியலும்

***முனைவர் வி.காயத்ரி பிரியதர்ஷினி***
*உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை*
*ஜி.டி.என். கலைக் கல்லூரி,*
*திண்டுக்கல்*

நாவல்தான் வரலாற்று கண்ணோட்டத்திலும் சமூகக் கண்ணோட்டத்திலும் மனிதனை நடப்பியல் ரீதியில் சித்திரித்துக்காட்டும் ஓர் உன்னத கலை வடிவம். அக்கலை வடிவமான நாவலில் சமகால வரலாறு முன்னிறுத்தப்படுமிடத்து படைப்பாளரின் கருத்தியல் சார்பு எவ்வாறு செயல்படுகிறது என்பது நோக்கத்தக்கது. அவ்வகையில் நவீனகால இந்திய அரசியலில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்திய இந்தியத் தேசிய இயக்கம், திராவிட இயக்கம் ஆகிய இயக்கங்களின் வரலாற்றையும், கருத்தியலையும் மையப்படுத்திப் பல இலக்கியப் படைப்புகள் தமிழில் உருவாயின. இவற்றில் சில அவ்வவ் இயக்கச்சார்புடைய படைப்பாளிகளால் எழுதப்பட்டவை. வேறுசிலவோ அவ்வாறு நேரடியாக எந்த ஒரு இயக்கத்தோடும் தன்னை இனங்கண்டுகொள்ளாத படைப்பாளிகளால் உருவாக்கப்பட்டவை. இயக்க உறுப்பினர், இயக்க அனுதாபி, இயக்கச் சார்பற்றவர் என்று பல நிலைகளில் படைப்பாளிகள் அமைகின்றனர். நேரடியாக இயக்கச்சார்பற்ற படைப்பாளியும்கூட ஏதோ ஒரு சார்புநிலை கொண்டே எழுதமுடியும் என்று வாதிடுபவர்களும் உண்டு.

**இலக்கியங்களின் இயக்கச் சார்பு**

தமிழில் சமகால வரலாற்றைப் பேசும் நாவல்களான ***சுதந்திரதாகம்*** நாவலும் ***பயணம்*** நாவலும் இயக்கச் சார்படைப்பாளர்களின் கருத்தியல் சார்போடு இந்திய மற்றும் தமிழக அரசியல் வரலாற்றை விரிவாக எடுத்துரைக்கின்றன. ***சுதந்திரதாக***த்தில் விடுதலைப்போராட்டத்தின் ஊடாக இந்தியா என்கிற தேசம் முன்னிலைப்படுத்தப்படுகிறது. பல்வேறு தேசிய இனங்கள் அவர்களது மொழிகள், பண்பாடுகள், பல்வேறு சமயங்கள், சாதிகள், இனக்குழுக்கள் எனப் பரந்துகிடக்கும் இந்தியத் துணைக்கண்டத்தை ஒற்றைத் தேசமாகக் கட்டமைக்கும் முயற்சியை இந்நாவலில் காண்கிறோம். மேற்கூறிய பன்மைநிலை (plurality) குறுக்கப்பட்டு வைதிக இந்துமதம் என்ற ஒற்றைச் சரட்டில் அவற்றை இணைக்கும் முயற்சியைக் காண்கிறோம். ***பயணம்*** நாவலோ இத்தகைய இந்தியத் தேசியத்திற்கு மாறாக ஒரு தமிழ்த்தேசியத்தை முன்வைக்கிறது. தமிழ்த்தேசிய இனத்தின் எதிர்நிலையாக அமையும் இந்தியத் தேசியம், அதன் பிரதான பிரதிநிதியான இந்தியத் தேசியக் காங்கிரஸ், சமூக–அரசியல் ஆதிக்கச் சக்திகளான ஆரியர், வடவர், பார்ப்பனர் ஆகியோரிடமிருந்து மீளுதலும் விடுபடலுமே முக்கியமாகின்றன. இவ்விரு படைப்பிலும் ஒரே வரலாற்று நிகழ்வான சேரன்மாதேவி குருகுலம் தொடர்பான விமர்சனம் எவ்வாறு தம் கருத்தியல் சார்போடு அணுகப்படுகின்றது என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

**சேரன்மாதேவி குருகுலத்தின் வரலாற்றுப் பின்னணி**

பிரிட்டிஷார் அளிக்கும் கல்விக்கு மாற்றான ஒரு கல்விமுறையை உருவாக்க வேண்டும் எனக் காங்கிரஸார் பலர் அன்று கருதினர். அதன் விளைவாகத் திருநெல்வேலி அருகே சேரன்மாதேவி என்ற இடத்தில் ஓர் ஆசிரமம் தொடங்கப்பட்டது. அது பரத்வாஜ ஆசிரமம் என அழைக்கப்பட்டது. அவ்வாசிரமத்தின் நோக்கம் என்ன என்பதை 26-9-1924 அன்று ***நவசக்தி*** இதழில் எழுதினார் வ.வே.சு.அய்யர்: "தமிழ் மாணவருக்கு லௌகீகக் கல்வியும், கைத்தொழிலும், வியாபார முறைகளும், ஒழுக்கமும், அத்தியாத்ம உணர்ச்சியும் கற்பித்துத் தரவேண்டும் எனவும், தமிழ்நாட்டு வீரம் நிறைந்த சரித்திரமும் பாரத நாட்டின் கம்பீரமான இதிகாசமும் இவை தவிர உலக சரித்திரங்களும் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டு வருகின்றன" (சுப்பிரமணிய அய்யர் 2003: 294). இந்த ஆசிரமத்தின் பிரதானப் புரவலர்களாக விளங்கியவர்கள் காங்கிரஸார். அவ்வியக்கத்தின்

செயலாளராக விளங்கியவர் பெரியார். இவர் இக்குருகுலத்திற்கு 10,000 ரூபாய் வழங்கும்படி ஆணையிட்டார். அதில் முதல் தவணையாக ரூபாய் 5,000 வழங்கப்பட்டது. அதன்பின் இக்குருகுலத்தைப் பற்றி எதிர்மறைச் செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. 1.வர்ணாசிரமம் கடைபிடிக்கப்படுகின்றது, 2.பார்ப்பன மாணவர்களுக்குத் தனிச் சமையல்காரர், தனிப்பாத்திரம், தனிஇடத்தில் பந்தி, 3.பார்ப்பனருக்குத் தனியே பிரார்த்தனை. இதை எல்லாம் சுட்டிக்காட்டிய பெரியார் சமபந்தி போஜனம் நடத்தப்படவில்லை என்றால் மீதத் தொகை தரப்படமாட்டாது என்றார். அய்யரோ இதை ஏற்கவில்லை. வேறு செயலாளரிடமிருந்து தொகையைப் பெற்றுச் சென்றுவிட்டார். இதை எதிர்த்துத் திரு.வி.க. மற்றும் வரதராஜுலு நாயுடு இவர்களுடன் இணைந்து எதிர்ப்புத்தெரிவித்தார் பெரியார்.

**இதழ்களும் கண்டனக் குரல்களும்**

இப்பிரச்சினை பற்றி வரதராஜுலு ***தமிழ்நாடு*** இதழில் எழுதினார்: “ஜாதி வித்தியாசம் பாராட்டாத குருகுலத்தினால்தான் ஏதாவது நமது தேசத்திற்கு நன்மை செய்ய முடியும். அதுதான் நமக்குத் தேவை. இந்த வித்தியாசம் தமிழ்க் குருகுலத்தில் இருந்துவருகிறது. ஆகவே இந்த வித்தியாசம் இருக்கும்வரை இக்குருகுலம் தமிழ்நாட்டிலுள்ள பிராமணரல்லாதாரை இழிவுபடுத்திக் காண்பித்துக் கொண்டிருக்கும் ஞாபகக்குறி என்று நான் கூறவேண்டியிருப்பதற்காக மிகவும் வருந்துகிறேன்” (அதியமான் 2013: 42).

இப்பிரச்சினை காந்தியடிகள்வரை சென்றது. காந்தியடிகள் 12-3-1925இல் ***இந்து*** இதழில் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அதில் “ஒருசாரார் மற்றவர்களோடு கலந்து, அமர்ந்து சமபந்திச் சாப்பாடு அருந்த விரும்பவில்லை என்றால் அவர்களின் அந்த உணர்வு மதிக்கப்படவேண்டும்” என்றார் (முத்துக்குமார் 2010:110). காந்தியடிகளின் கருத்திற்குப் பெரியார், திரு.வி.க., வரதராஜுலு நாயுடு போன்றோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதழ்களிலும் இது தொடர்பான கண்டனம் தெரிவிக்கப்பட்டது. பெரியார் தன் ***குடிஅரசு*** இதழில் நவம்பர் 21, 1925இல் காங்கிரஸ்காரர்களைச் சாடும்விதமாக எழுதினார்: “தீண்டாமையை ஒழிக்க வேண்டியது பிராமணரல்லாதாருக்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் தீண்டாதவர்களின் முன்னேற்றம்தான் பிராமணரல்லாதாரின் முன்னேற்றமாகும். தீண்டாதவர்களின் துன்பந்தான் பிராமணரல்லாதாரின் துன்பமாகும். தீண்டாமை ஒழிவதன் மூலமாய்த்தான் நாடு சுயராஜ்யமடையும்” (ராஜதுரை, கீதா 2009: 43). ***லக்ஷ்மி, குமரன், நவசக்தி*** முதலிய பத்திரிகைகளும் குருகுலத்தில் நடைபெறும் பந்திமுறை வேறுபாட்டைக் கண்டித்தன. அதேவேளையில் ***சுதேசமித்திரன்*** நாளேடோ வ.வே.சு.அய்யர் உயர்சாதியினருடன் போராடிச் சமத்துவத்தை நிலைநிறுத்தச் சிறப்பான முயற்சி எடுத்துவருவதாகக் கூறியது. அத்தோடு கீழ்வரும் கருத்தையும் முன்வைத்தது: “இப்போதிருக்கும் பந்தி வித்தியாசம், பிராமண-பிராமணரல்லாதோர் உணர்ச்சியின் வெளிப்பாடு அன்று. எல்லாச் சாதியாரிடமும் பரவிக்கிடக்கும் சாதி உணர்ச்சிப்பேயின் வாடை” (அதியமான் 2013: 47). இவ்வாறு சாதி வேற்றுமைக்குப் பார்ப்பனரை மட்டும் காரணம் காட்டுவது தவறு எனக்கூறியது. இதையொட்டி, எதிர்ப்புகளைச் சமாளிக்க வ.வே.சு.அய்யர் பெற்றோரின் வேண்டுகோளுக்கு இணங்கவும், இடப்பற்றாக்குறையினாலேயுமே அனைவருக்கும் ஒன்றாக உணவு அளிக்க முடியவில்லை எனத் தன் ***பாலபாரதி*** இதழில் அறிக்கை ஒன்றை அளித்தார். பிரச்சினை தீர்ந்தபாடில்லை என்பதை உணர்ந்த அவர், சாதிரீதியிலான உயர்வுதாழ்வு என்ற விஷயமே இதற்கு அடிப்படை என்பதால் இந்தப் பேதத்தை நீக்கச் சம்ஸ்கார பரிகாரம் என்ற பெயரில் பூணூல் தரித்து உடன்உண்ணச் செய்யலாம் என ஆலோசனை கூறினார். இதை ***லோகோபகாரி, குமரன்*** போன்ற இதழ்கள் சாடின. இந்நிலையில்

**எதிர்ப்பின் எதிர்வினைகள்**

வ.வே.சு.அய்யர் தன் ஆச்சாரியர் பதவியை விட்டு விலகினார். அவருக்குப் பதிலாக ஆச்சாரியராக மகாதேவ அய்யர் நியமிக்கப்பட்டார். இப்பிரச்சினை தொடர்பாகக் காங்கிரஸ் ஒரு கமிட்டி அமைத்தது. பிறப்பு வழிப்பட்ட வேறுபாடு இருக்கக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டது. “ஐயர் நடத்திய குருகுலத்தில் பிறப்பு வழிப்பட்ட வேறுபாடு இருக்கக்கூடாது என்று எஸ்.ராமநாதன் 1925இல்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது அதை எதிர்த்த 7 பேர்களில் ஆறு பேர் பார்ப்பனர்களாவார்கள்.காலம் கனிந்து வரும்வரை சமபந்தியைத் தனியார் நடத்தும் குருகுலத்தில் வலியுறுத்தக் காங்கிரசுக்கு உரிமை இல்லை என்றார் ராஜாஜி" (பரமசிவன் 1993: 18). வ.வே.சு.அய்யரின் மரணத்திற்குப்பின் மகாதேவ அய்யர் கைவசமிருந்த குருகுல உடைமைகளைத் தனதாக்கிக் கொள்ள முயற்சி செய்கிறார் என்ற குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில் மகாதேவ அய்யர் பதவிவிலகினார். அவருக்குப்பின் குருகுலச் சொத்துகளை நிர்வகிக்கும்படி டி.எஸ்.எஸ்.ராஜனைக் காந்தியடிகள் நியமித்தார். அவ்வாசிரமத்தின் ஆச்சாரியராகச் சங்கரநாராயண அய்யரை நியமித்தனர். ஆனால் போதிய நிதி வசதியின்றி அவ்வாசிரமம் மூடப்பட்டது.

**சேரன்மாதேவி குருகுலமும் படைப்பாளர்களின் கண்ணோட்டமும்**

இச்சேரன்மாதேவி குருகுலப் பிரச்சினையை சி.சு.செல்லப்பாவும் வேள்நம்பியும் தங்கள் இயக்கச் சார்போடு காணுகின்றனர். ***சுதந்திரதாகம்*** நாவலில் சிவராமன் தன் தந்தையுடன் வ.வே.சு.அய்யர் வாழ்ந்த திருநெல்வேலியில் உள்ள ஆசிரமத்தைக் காணச் செல்கின்றார். அந்த ஆசிரமத்தின் நிலையைக் கண்டு வருந்தும் சிவராமனுக்கு வெங்கடேஸ்வர அய்யர் உண்மையில் அங்கே நடந்தது என்ன என விளக்கும் விதமாகப் படைத்துள்ளார் சி.சு.செல்லப்பா. அங்கே படித்தவர்கள் பெரும்பாலும் பிராமணப் பிள்ளைகள். ஆசிரமத்திற்கு இடம் அளித்த கிராம மக்கள் சமபந்தி போஜனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். நிதி அளிப்பவர்களின் வேண்டுகோளும் அதுவே. எனவேதான் வ.வே.சு.அய்யர் அவ்வாறு செய்தார் என அந்நிகழ்வுக்கு நியாயம் கற்பிக்கிறார்: "இதில் யாரைக் குற்றம் சொல்ல என்று சொல்ல முடியவில்லை. இரண்டு லட்சியங்கள் மோதி இருக்கின்றன. ஒன்று சனாதன தர்மம். மற்றது சமூகச் சீர்திருத்தம். ஆரிய சமாஜ், பிரம்ம சமாஜ் முதலிய இயக்கங்கள் தோன்றியதே இந்த விதமான வேறு சில காரணங்களால்தான். அவர்கள் பிரச்சாரம் செய்து சீர்திருத்தப் பார்த்தார்கள். அவர்கள் அவசரப்படவில்லை. இவர்கள் அவசரப்பட்டுவிட்டார்கள். ஜனங்கள் மனத்தை மாற்றப் பிரச்சார இயக்கம் நடத்தி இருக்க வேண்டும். அதைவிட்டு, துவேஷத்தைக் கிளப்பி, பலாத்காரத்தைக் கடைபிடித்தது சரியான முறையல்ல என்பதோடு பலனும் இருக்காது" (செல்லப்பா 1997: 360). இங்கே வ.வே.சு.அய்யரின் செயலை நியாயப்படுத்தும் விதமாகக் கதைமாந்தரின்வழிப் பேசுகிறார் ஆசிரியர். போராட்டம் நடத்தியவர்களின் பெயரோ, எதிர்ப்புத் தெரிவித்த இதழ்கள் பற்றியோ எத்தகவலும் இல்லை. அவர்களின் செய்கையை மட்டும் விமர்சனம் செய்கிறார். இக்கருத்து ஆசிரியரின் காங்கிரஸ் அபிமானத்தைக் காட்டுவதாக உள்ளது.

***பயணம்*** நாவலில் குப்புசாமி என்ற காங்கிரஸ்காரரிடம் பெரியார் காங்கிரஸ் இயக்கத்தை விட்டு வெளியேறியதற்கான காரணத்தைப் பாண்டியன் விளக்கும் விதமாக இந்நிகழ்வை அமைத்துள்ளார் ஆசிரியர். காங்கிரஸாரின் பார்ப்பன ஆதரவே பெரியாரை அச்செயலைச் செய்யத்தூண்டியது என எடுத்துக்கூறும் பாண்டியன், சேரன்மாதேவி நிகழ்வை விளக்குகிறார்: "எந்தத் தீண்டாமையைப் போக்கணும்னு காங்கிரசு சொல்லி வந்ததோ, அதன் பணத்துலேயே தீண்டாமை வளர்வதானு அன்றைக்கு நாட்டுலே ஒரு பெரிய கேள்வியா எழுந்து பரவி, கொதிப்பையே உண்டாக்கிவிட்டது. அப்போ பெரியார் வெள்ளைக்காரன் வெளிறுேவதற்கு முன்பாகவே இந்தப் பார்ப்பான் பிரச்சினையை முடித்துக்கொள்ள வேண்டும் என்றார்" (வேள்நம்பி 2007: 292). இங்கே காங்கிரஸைச் சாடுவதற்காகவும் பார்ப்பன ஆதிக்கத்தை எடுத்துக்காட்டவும் இந்த வரலாற்று நிகழ்வை எடுத்துரைக்கிறார். திராவிட இயக்கத்தாரின் அடிப்படைக் கருத்தியலான ஆரிய எதிர்ப்பு என்பதை ஆசிரியர் காங்கிரஸ் இயக்கத்தோடு காணும் மனோபாவம் வெளிப்படுகின்றது. பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பின் முதல் படி காங்கிரஸ் எதிர்ப்பு என்கிறார். இவ்விரு படைப்பாளார்களும் தங்கள் இயக்க நிலைப்பாட்டோடு இந்நிகழ்வை அணுகுகின்றனர். ஒரே வரலாறு படைப்பாளர்களின் பார்வையில் தம் இயக்கக் கருத்தியலின் கொள்கைக்கு மாறுபாடு தோன்றா வண்ணம் செயல்படுவது புலப்படுகின்றது.

**நிறைவுரை**

ஒருவர் பார்வையில் சரியானவையாக கருதப்பட்ட சமகால வரலாற்று நிகழ்வு மற்றொருவரின் பார்வையில் சாதிய வன்முறையாகச் சித்தரிக்கப்படுகின்றது. சமகால வரலாற்றை எடுத்தாளும்பொழுது தங்கள் அரசியல் நிலைப்பாட்டிலிந்தே அணுகுகின்றனர். ஒரே காலக்கட்டத்தில்

 ISSN: 2454-3993

இயங்கி வந்த இரு வேறு இயக்கங்களின் பார்வை, கருத்தியல் முரண்பாடு போன்றவை எவ்வாறு மோதியுள்ளன என்பதை இவ்வரலாறு தெளிவாக உணர்த்திவிடும் மேலும் வரலாற்றைப் புனைவாக்கும்பொழுது படைப்பாளரின் புனைவாக்க அரசியல் செயல்படும் விதத்தையும் அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. அதியமான்,பழ., 2013. சேரன்மாதேவி குருகுலப் போராட்டமும் திராவிட இயக்கத்தின் எழுச்சியும். நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
2. செல்லப்பா,சி.சு., 1997.சுதந்திரதாகம். சென்னை: எழுத்து-வெளி வெளியீடு.
3. பரமசிவன், தொ.,2014. இதுதான் பார்ப்பனியம். பாளையங்கோட்டை: மணி பதிப்பகம்.
4. முத்துக்குமார்,ஆர்.,2011. பெரியார். சென்னை: மினிமேக்ஸ்
5. ராஜதுரை, எஸ்.வி.,வ.கீதா. 2009. பெரியார்: சுயமரியாதை சமதர்மம். கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம்.
6. வேள்நம்பி. 2007. பயணம். சென்னை: சீதை பதிப்பகம்.